# ஆய்வு அறிமுகம்

## முன்னுரை

கிறிஸ்தவர்களால் புனித நூலாகக் கருதப்படுவது பைபிள் (Bible) ஆகும். இதன் மூலம் எபிரேயு மொழியாகும். இதிலிருந்து பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு செல்வாக்குடன் வலம்வந்து கொண்டிருக்கிறது. தமிழ் மொழி பெயர்ப்புப் 'பரிசுத்த வேதாகமம்' என்று அழைக்கப்படுகிறது. இதன் வசனங்கள் - கருத்துக்கள் பலராலும், பலநிலைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றுள் 'ஞானப்பாட்டுகளும் கீர்த் தனைகளும்' என்னும் பாடல் தொகுப்பு கிறிஸ்தவ வழிபாடு களில் இடம்பெறுகிறது. அதேபோன்று பலரால் உருவாக் கப்பட்ட பல்வேறு பாடல்களும் சிறப்பு நிலையில் வழிபாட்டில் இடம்பெறுகின்றன. இவை அனைத்திலும் திருமறையின் (பரிசுத்த வேதாகமம்) தாக்கத்தினைக் காண முடியும். இலக்கியத் திறனாய்வாளர்கள் தாக்கத்திற்குச் சில அடிப்படைக் கோட்பாடுகளை வரையறுத்துள்ளனர். அக்கோட்பாடுகளின் அடிப்படையில் திருமறையின் தாக்கம் அப்பாடல்களில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை கண்டறியும் முயற்சியின் அடிப்படையில் இவ் ஆய்வு அமைகின்றது.

## ஆய்வு தலைப்பும் நோக்கமும்

'கிறிஸ்தவ கீதங்களில் திருமறையின் தாக்கமும் தாக்கக் கோட்பாடுகளும்' என்பது ஆய்வுத்தலைப்பு. கிறிஸ்தவ வழிபாடுகளில்

பொதுநிலையிலும், சிறப்புநிலையிலும் இடம் பெறும் பாடல்களில் திருமறையின் வசனங்கள், கருத்துக்கள் எத்தகைய தாக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில் இடம் பெற்றுள்ளன என்பதைக் கண்டறிவதே ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

## ஆய்வின் கருதுகோள்

தொல்காப்பியர் நூலினை முதல்நூல், வழிநூல் என்றும், நன்னூலார் நூலினை முதல்நூல், வழிநூல், சார்புநூல் என்றும் பகுத்து விளக்குகின்றனர். ஓர் இலக்கியம் பிறக்க இன்னொரு இலக்கியம் அடிப்படையாக அமைகின்றது என்பதையும், ஓர் இலக்கியத்தின் ஒருசில அம்சங்கள் இன்னொரு இலக்கியத்தில் இடம்பெறும் என்பதையும் தொல்காப்பியர் - நன்னூலார் கருத்துக்களின் வழி அறிந்து கொள்ளலாம். இதையே இலக்கியத் திறனாய்வு உலகில் தாக்கம் என்று அழைக்கின்றனர். இத்தாக்கம் இலக்கியங்களில் எவ்வாறு இடம்பெறும் என்பதற்கு சில கோட்பாடுகளை மேலை இலக்கியத் திறனாய்வின் அடிப்படையில் வரையறை செய்துள்ளனர். தொல்காப்பியர், நன்னூலாரது கோட்பாடுகளின் அடிப்படையில் முதல்நூலின் தாக்கம் வழிநூலிலும், சார்பு நூலிலும் இடம்பெறும் என்பதும் அதற்கு மேலை இலக்கியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடும் தாக்கக் கோட்பாடுகள் துணை செய்யும் என்பதும் ஆய்வின் கருதுகோளாக அமையும்.

## கருவி நூற்கள்

இவ் ஆய்வின் கருவிநூற்களாக அமைவன: I. கிறிஸ்தவ இறைவழிபாட்டின் போது பொதுநிலையில் அமையும் பாடல் தொகுப்பான 'ஞானப்பாட்டுகளும் கீர்த்தனைகளும்' (1951).

II. கிறிஸ்தவ இறைவழிபாட்டின்போது சிறப்பு நிலையில் அமையும் பின்வரும் பாடல் தொகுப்புகள். (ஆரம்பகால முதல் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலகட்டம் வரையிலாக வெளிவந்தவை) அவை:

1. கன்வென்ஷன் பாடல்கள் (70)
2. நற்செய்திக் கீதங்கள் (71)
3. எழுப்புதல் கீதங்கள் (24)
4. விடுமுறை வேதாகமப்பள்ளிப் பாடல்கள் (26)
5. கிறிஸ்து பிறப்புப் பாடல்கள் (29)
6. தியானப் பாடல்கள் (30)
7. முகமைப் பாடல்கள் (15)
8. விடுதலையின் கீதங்கள் (16)
9. உபவாச கீதங்கள் (13)
10. மகிழ்ச்சிக் கீதங்கள் (12)
11. இன்னிசை கீதங்கள் (14)
12. உதிரிப்பாடல் தொகுதிகள் (136)

அடைப்புக் குறிக்குள் தொகுதிகளின் எண்ணிக்கை கொடுக்கப் பட்டுள்ளன)

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூற்களும், தாக்கம் பற்றிய திறனாய்வு நூற்களும், கட்டுரைகளும், வழிபாட்டுப் பாடல்கள் குறித்த விளக்க நூற்களும் இவ் ஆய்விற்குத் துணை நூற்களாக அமைகின்றன.

திருமறை வசனங்களின் தாக்கம் குறித்த ஆய்வுகள் இதுகாறும் வெளிவரவில்லை. 'பாட்டு பிறந்த கதை' (1998),

'பாடல் பிறந்த கதை (1999)', '101 Hymn Stories (1999)' 'ஜாண்பால்மர் கீர்த்தனைகள் (2000)' போன்ற நூற்கள் வழிபாடுகளில் பொதுநிலையில் இடம்பெறும் பாடல்கள் குறித்த விளக்க நூற்களாக அமைகின்றன.

எமது எம்ஃபில் பட்டத்திற்காக 'ஆராதனைப் பாடல்களில் திருமறையின் தாக்கம்' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்ஆய்வு ஒரு முழுமையான ஆய்வு என்பதற்கில்லை. மேலும் இவ்ஆய்வில் சிறப்பு நிலையில் இடம்பெறும் பாடல்கள் இணைக்கப்படவில்லை. எனவே திருமறை வசனங்களின் தாக்கம் குறித்த ஆய்வு முழுமை யானதாக அமைய வேண்டும் என்ற நோக்கில் முனைவர் பட்ட ஆய்விற்கு இத்தலைப்புத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## ஆய்வேட்டின் அமைப்பு

ஆய்வு அறிமுகம், ஆய்வு நிறைவுரை நீங்கலாக இவ் ஆய்வேடு மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

1. தாக்கமும் தாக்கக் கோட்பாடுகளும்
2. வழிபாட்டுப் பாடல்களில் திருமறைத்தாக்கம்
3. சிறப்புப் பாடல்களில் திருமறைத் தாக்கம்

தாக்கமும் தாக்கக் கோட்பாடுகளும் என்னும் இரண்டாம் இயல் முன்னுரை, தாக்கம் - விளக்கம், தாக்கம் - தொல் காப்பியர், தாக்கம் - நன்னூலார், தாக்கம் - தமிழிலக்கியங்கள், ஆங்கில மொழி இலக்கியத்தாக்கம், மேலைநாட்டு மொழி இலக்கியத்தாக்கம், வடமொழி இலக்கியத்தாக்கம், தமிழிலக்கி

யங்களுக்குள் தாக்கம், ஒப்பிலக்கிய ஆய்வும் தாக்கமும், தாக்கமும் ஆய்வு நிலையும், தத்துவ கருத்துத்தாக்கம் தாக்கக் கோட்பாடுகள், கடன் வாங்கல், தூண்டுதல், ஈடுபாடு, வழிகாட்டி, செல்வாக்கு, எதிர்நிலை, காலச்சூழ்நிலை, தொகுப்புரை என்னும் தலைப்புகளில் ஆய்வுச்செய்திகளாக தரப்பட்டுள்ளன.

மூன்றாம் இயலான 'வழிபாட்டுப் பாடல்களில் திருமறைத் தாக்கம்' என்பதில் முன்னுரை, வழிபாடு, சங்க காலமும் வழிபாடும், பக்தி இயக்கமும் வழிபாடும், கிறிஸ்தவ வழிபாடு, வழிபாட்டிற்குரிய ஆதார நூல், திருமறை - வழிநூல், கிறிஸ்தவ வழிபாட்டுப் பாடல்கள், ஞானப் பாடல்கள், கீர்த்தனைகள், வழிபாட்டுப் பாடல்களின் சிறப்பு, வழிபாட்டுப் பாடல்களின் இசை, வகைப்பாடு, ஆலயத்தொழுகை, கிறிஸ்து பிறப்பு, பாடுமரணம், உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை, பரிசுத்த ஆவி, கிறிஸ்தவ ஜீவியம், விசேஷப் பாடல்கள், தொகுப்புரை என்னும் தலைப்புகளில் ஆய்வுச் செய்திகள் தரப்பட்டுள்ளன.

நான்காம் இயலான 'சிறப்புப் பாடல்களில் திருமறைத் தாக்கம்' என்பதில் முன்னுரை, சிறப்புப் பாடல்கள், சிறப்புப் பாடல்களின் தொகுப்பு, கன்வென்ஷன் கீதங்கள், நற்செய்திக் கீதங்கள், விடுமுறை வேதாகமப் பள்ளிப் பாடல்கள், எழுப்புதல் கீதங்கள், முகமைப் பாடல்கள்,கிறிஸ்து பிறப்புப்

பாடல்கள், தியானப் பாடல்கள், விடுதலையின் கீதங்கள், உபவாச கீதங்கள், மகிழ்ச்சிக் கீதங்கள், இன்னிசைக் கீதங்கள், சிறப்புப் பாடல்களின் வகைப்பாடு, அர்ப்பணிப்புப் பாடல்கள், அற்புதங்கள் பற்றியப் பாடல்கள், இரண்டாம் வருகை பற்றியப் பாடல்கள், இறை அன்பு பற்றியப் பாடல்கள், இறைசாட்சிப் பாடல்கள், இரட்சிப்புப் பற்றியப் பாடல்கள், இறைப்புகழ் பாடல்கள், இறை வேண்டல் பற்றியப் பாடல்கள், இயேசுவை பின்பற்றுதல் பாடல்கள், இறையருள் பாடல்கள், சிலுவை மரணப் பாடல்கள், மனமகிழ்ச்சிப் பாடல்கள், விண்ணரசு பற்றியப் பாடல்கள், சிறப்புப் பாடல்களின் நிலை, திரும்பவரும் பாடல்கள், ஒரே மாதிரியான கருத்து, ஒரே திருமறை வசனம், தொகுப்புரை என்னும் தலைப்புகளில் ஆய்வு நிகழ்த்தப் பட்டுள்ளது.

ஆய்வு நிறைவுரையை அடுத்துத் துணை நூற்பட்டியல் இடம்பெறுகிறது. பின்னிணைப்புகளாக ஒவ்வோர் இயலின் கருத்து விளக்கங்களைத் தெளிவுபடுத்தும் அட்டவணைகள் இடம்பெற் றுள்ளன.

## ஆய்வு நெறிமுறை

வழிபாட்டுப் பாடல்களையும் சிறப்புப் பாடல்களையும் அதில் இடம்பெற்றுள்ள செய்திகளுக்கேற்ப வகைப்படுத்தி பகுத்து அதனடிப்படையில் தாக்கக் கோட்பாடுகள் எவ்வாறு இடம்பெற் றுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளன. திரு மறையின் வசனங்கள் தாக்கம் பெற்றுள்ளதை விளக்கும் போது பாடல் பிறந்த சூழலும்,

வரலாறும் சுட்டப்பட்டுள்ளன. படைப்பாளனது ஈடுபாடே தாக்கம் ஏற்பட முழுமுதற் காரணமாகும். என்றாலும் இக்கருத்தை முழுநிலைப் படுத்தாது பாடல் இடம்பெறும் திருமறை வசனங்களை மையமாகக் கொண்டு படைப்பாளனது உள் உணர்வு சார்ந்துள்ள தாக்கக் கோட்பாடுகளுக்கேற்ப பொதுநிலையில் அமையும் வழிபாட்டுப் பாடல்களையும், சிறப்புப் பாடல்களையும் பகுத்து வகைப் படுத்தி ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

மேற்கோள்கள் இடம்பெற்ற இடங்களில் அவை பயிலும் நூல், வெளியிட்ட ஆண்டும், பக்க எண்ணும் (பிறைவடிவ) அடைப்புக் குறியுள் குறிக்கப்பட்டுள்ளன.

பொதுநிலையில் அமையும் வழிபாட்டுப்பாடல்கள், சிறப்பு நிலையில் அமையும் பாடல்கள் இடம்பெறும் பாடல் தொகுதியின் பெயர், பக்க எண் என்னும் நிலையில் (பிறைவடிவ) அடைப்புக் குறிக்குள் சுட்டப்பட்டுள்ளன.